gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A
69/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருடம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—விய஁ு மார்கழி மீ கள உ (1946 டிசம்பர் 31 செவ்வாய்க்கிழமை) [இல எரு

# இனி சமதர்மந்தான்!

## பரவும் என்கிறார் பேராசிரியர்

ஜோர்ஜ் சந்தாயன என்பவர் பிரசித்தி பெற்ற ஸ்பானியப் பெரியார் ஓர் பெரிய அரசியல்ஞானி; அரசியல் விஷயங்களில் ஓர் தீர்க்கதரிசி என்று கூறினும் பொருந்தும். இவர், ஸ்பெயினில் பிராங்கோ ஆட்சி ஏற்பட்டபின், இற்றலியில் ரோமாபுரியில் வசித்து வருகிறார்.

பேராசிரியர் சந்தாயன ஐரோப்பாவின் எதிர்கால விஷயமாக இப்போது ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். ஐரோப்பா முழுவதும், சமதர்மக் கொள்கைகளையே தழுவிய ஓர் அரசியல் வருவதற்கான உற்பாதங்கள் இப்போதே தோன்றியிருக்கின்றன என்று அவர் கூறுகிறார். இன்னும் "இந்த உலகம் முழுவதுமே ஓர் இராச்சியமாக ஏற்பட்டு அங்கே சமதர்மக் கொள்கைகள் ஏற்பட்டால் நான் ஆச்சரியப்படமாட்டேன். ஆனால், அப்படியாக உலக ஒற்றுமை ஏற்படுமானால், அதனை இங்கிலாந்தும் அமெரிக்காவும் விடுமா என்பது ஆசங்கை. அப்படியான நிலை ஏற்படில், உலகில் இரு கட்சிகள் ஏற்படும். ஒன்று ஆங்கில—அமெரிக்கக்கட்சி மற்றது சோவியத்கட்சி" என்று பேராசிரியர் சந்தாயன கருதுகிறார்.

உண்மையில் உலக ஒற்றுமை ஏற்படவேண்டுமேயானால், இன்னோர் உலக யுத்தம் ஏற்படத்தான் வேண்டும் என்று பேராசிரியர் சந்தாயன கூறி மேலும் பின்வருமாறு தெரிவிக்கிறார்:-

'இப்போது நாலு வல்லரசுகளும் ஜெர்மனியைப் பங்குபோட்டு, அந்நாட்டை ஆக்கிரமித்திருக்கின்றன. ஆனால், இவை நான்கும் அகன்றதும் ஜெர்மனி நிச்சயமாகச் சமதர்மத்தையே தழுவும். ஜெர்மனி அப்படிச் செய்தவுடன், ஏற்கெனவே சமதர்மத்தின் செல்வாக்குக்குள் அகப்பட்டிருக்கும் பிரான்ஸ், இற்றலி, ஸ்பெயின் என்னும் நாடுகளும் சமதர்மத்தைக் கொள்ளலாம்.

"இன்றைக்கு ஜனநாயகம் ஜனநாயகம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் ஜனநாயகத்தால் ஏதும் உலகத்துக்கு நன்மைகள் கிடைக்கப் போகிறதா?"

## கண்டியில் சிறந்த ஓர் ஆஸ்பத்திரி

கண்டியிலே, நவீன சாதனங்களுடன் அமைந்த ஓர் பெரிய ஆஸ்பத்திரியை நிறுவுவதற்கு அரசாங்கம் நிச்சயித்திருக்கிறது. இதற்கென 30 ஏக்கர் நிலம் வாங்கப்படும்.

## இற்றலியத் துணிகள்

வருகிற ஜனவரி மாதத்தில், இத்தலியிலிருந்து ஓர்தொகைத் துணிகள் இலங்கையில் இறக்குமதியாகும் என்று தெரிகிறது. இவை அனேகமாகப் பட்டுக்களாகவே யிருக்குமாம்.

## விலகவேண்டியதில்லை

ஓர் அரசாங்கசபை அங்கத்தவர் அடுத்தடுத்து மூன்றுமாதங்களுக்கு வராமல் விட்டார் என்றும் அவர் நவம்பர்மீ 25-ந் திகதிக் கூட்டத்திற்குச் சமூகமளிக்காம லிருக்கவும், அவர்பெயர் சமூகமளித்தவர் இடாப்பிற் காணப்பட்டதென்றும் இப்பத்திரிகையில் ஓர் செய்தி முன்னர் வெளியாகியிருந்தது. குறித்த அங்கத்தவர் மட்டக்களப்புப் பிரதிநிதியான ஸ்ரீ வீ. நல்லையா என்பது இப்போது தெரிகிறது.

ஸ்ரீ நல்லையா, கடைசியாக செப்டெம்பர்மாதம் 25-ந் திகதி நிகழ்ந்த கூட்டத்திற் சமூகமாயிருந்தார். அப்படியானால் அவர் டிசெம்பர் 25-ம் திகதியுடன் தம் பதவியை இழப்பர் என யூகிக்கப்பட்டது; ஆனால் சபைப் பிரமாணங்களின்படி ஸ்ரீ நல்லையா தம் பதவியை விட்டு விலகவேண்டியதில்லை என்று அரசாங்கசபைத் தலைவர் சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி இப்போது தீர்மானித்திருக்கிறார்.

நவம்பர்மாதம் 26ந் திகதி ஸ்ரீ நல்லையா அரசாங்கசபைக் கூட்டத்துக்குச் சமூகமளிக்காதபோதும், அவர் சமூகமளித்ததாகக் குறிப்பிடப்பட்டது, இது அங்கேயுள்ள லிகிதரின் பிழை என்று இப்போது தெரிகிறது.

## பட்டாசுகளினால் விபத்து

இப்போது இலங்கையில் இறக்குமதியாயிருக்கும் பட்டாஸ்களும் உள்ளூரில் செய்யப்படும் வெடிகளும், மிகவும் சாவதானமாகக் கொழுத்தப்படவேண்டும் என்று தெரிகிறது முந்திய காலங்களில் இங்கே வந்துள்ள வெடிகளின் திரியில் நெருப்பு வைத்த சில நேரத்துக்குப் பின்னரே அவை வெடிக்கும் இப்போதுள்ள வெடிகள் அப்படியில்லை இதன் பயனாகப் பல விபத்துக்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மேல் மாகாணத்தைச் சேர்ந்தவெலியகொடையில் 13 பேர் கடுங் காயமுற்று ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். கொழும்புக் கண் வைத்தியசாலைக்கு 12 பேர் சிகிச்சைக்காக அநுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவனுடைய கண் அப்படியே கெட்டுவிட்டதாம், இன்னும் இரண்டு பிள்ளைகளுடைய கண்ஒளி பங்கப்பட்டுவிட்டது. கொழும்பிலே நத்தார்த் தினத்துக்குப் பிறகு எல்லாமாக 30 பேர், பட்டாஸ் வெடிவிபத்தில் அகப்பட்டு இருக்கின்றனர். இங்குள்ள பெற்றோரும் தம் பிள்ளைகளுக்குப் பட்டாஸ்கள் வாங்கிக் கொடுக்கும் விஷயத்தில் சாவதானமாயிருப்பாராக.

## மௌலானா அபுல்கலாம்அஸாத்

ஜனாப் அஸாப்அலிக்குப் பதிலாகக் காங்கிரஸினால் இடைக்கால அரசாங்க அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ள மௌலானா அபுல்கலாம் ஆஸாத்அவர்கள் இப்போது ஸ்ரீஜுத் இராஜகோபாலாச்சாரியார் வகித்துள்ள கல்வி மந்திரிப் பதவியை ஏற்கலாம் என்றும், ஸ்ரீ ஆச்சாரியார் கைத்தொழில் மந்திரியாகலாம் என்றும் சொல்லப்படுகிறது.

# பிரதம மந்திரிப் பதவி

## மிஸ்ரர் பண்டாரநாயக்கா தனக்கு வேண்டாமாம்

மீரிகமத்தில் உள்ள பாஸ்யகலை என்னும் கிராமத்திலே, மிஸ்ரர் செனநாயக்காவை அடுத்த பாராளுமன்றத்து அபேட்சகராக வருவதை ஆதரிக்குமுகத்தால் ஓர் கூட்டம் சென்ற வியாழக்கிழமை நிகழ்ந்தது. அக்கூட்டத்துக்கு மிஸ்ரர் பண்டாரநாயக்கா தலைமை வகித்தார்.

அடுத்த பாராளுமன்றத்தில் தன்னையே பிரதம மந்திரியாக வரச் சொல்லி எத்தனையோ நண்பர்கள் கேட்டிருந்தபோதிலும், தான் அதனை விரும்பாது, மிஸ்ரர் செனநாயக்காவே பிரதம மந்திரியாக வேண்டும் என விரும்புவதாக மிஸ்ரர் பண்டாரநாயக்கா தம் பிரசாரணத்திற் குறிப்பிட்டார்.

மிஸ்ரர் செனநாயக்கா பேசும்போது, தமக்கும் மிஸ்ரர் பண்டாரநாயக்காவுக்கு மிடையே எவ்வித மான அபிப்பிராய பேதமும் கிடையாது என்றும் தாங்கள் இருவரும் மனத்தொருமித்த நண்பர்கள் என்றும் புகழ்ந்து பேசினர்.

## 1 கோடி தங்கப்பவுன்

யுத்தம் நடந்த காலத்திலே 1 கோடி பவுண் பெறுமதியான தங்கத்தை இங்கிலாந்திடம் அடைக்கலமாகப் போலந்து கொடுத்திருந்தது. அதனை இப்போது திருப்பிக்கொடுக்க பிரிட்டிஷ் அரசாங்கம் மறுக்கிறது என்று போலந்து அரசாங்கம் ஓர் அறிக்கையை உலகமக்கள் கவனத்துக்கு விட்டிருக்கிறது.

# பொலிசார் ஆட்சேபம்

## மிஸ்ரர் அலுவிகாரையின் நியமனம்

மிஸ்ரர் அலுவிகாரையை இலங்கையின் பொலிஸ் அதிகாரியாக நியமிக்கவேண்டுமென இலங்கை மந்திரசபை தீர்மானித்ததைக் குடியேற்ற குடியேற்றநாட்டு மந்திரியும் அங்கீகரித்து விட்டார். எனவே இப்போதுள்ள பொலிஸ் அதிகாரி மிஸ்ரர் R. R, M. பேக்கனும், ஏனைய இரு உயர்தர அதிகாரிகளும், ஜனவரி மாதம் நடுப்பகுதியில் தமது பதவியை விட்டு விலகுவர்.

மிஸ்ரர் அலுவிகாரைக்கு, இப்போதுள்ள சிவில் சேர்விஸ் வேதனம்தான் கொடுக்கப்படுமாம்!

இது இப்படியிருக்க, இலங்கையில் உள்ள பொலிசார், பொலிஸ் சார்ஜண்டுகள் என்பவர்களுக்கு மிஸ்ரர் பேகனை நீக்கி ஓர் இலங்கையரை - அதுவும் ஓர் சிவில் சேர்விஸ் உத்தியோகத்தரை நியமிப்பது விருப்பமாகவில்லை என்று தெரிகிறது

மிஸ்ரர் பேக்கனை விலக்கவொண்ணாது என்றும், ஓர் சிவில்சேர்விஸ் உத்தியோகத்தரை அப்ருடைய இடத்துக்கு நியமிக்கவொண்ணாதென்றும், பொலிஸ் சேவகரும் ஜார்சண்டுமாரும் ஓர் மனு அனுப்ப நிச்சயித்திருக்கிறார்கள்,

பொலிஸ் விசாரணைச்சபை அறிக்கையின்படி பொலிஸ் நிருவாகம் இனி நடைபெறுவதாக இருந்தால், இதுகாறும் சிறப்புடனிருந்த இந்த பொலிஸ் பகுதி அப்படியே தலைகீழான நிலையை எய்தக்கூடும் என்று பொலிஸ் சேவகர் பலர்கருதுகிறார்களாம்.

## பொலனறுவையிற் பேதி நோய்

பொலனறுவையிற் பேதி நோய் மீண்டும் ஆரம்பமாகியிருக்கிறது, பொலனறுவைப் புகைரதத்தானத்துக்கயலே வசித்த ஓர் தொழிலாளி இந்நோயாற் பீடிக்கப்பட்டுச் சென்றவாரம் இறந்தார்.

# இந்தியக் குடியரசு

## அந்நிய நாடுகளின் ஆதரவு

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தில் இருந்தபோது இந்திய சுதந்திர விஷயமாக அந்நிய நாட்டுப் பிரதிநிதிகளின் மனோபாவம் எப்படியிருக்கிறதென்பதை அறியுமாறு, அவருடைய தமையனாகிய பண்டிதர்நேரு கூறினாராம். இந்தியாவைக் குடியரசாக்கும் விஷயத்தில் இந்தியாவுக்குள்ளேயே பல எதிர்ப்புக்கள் இருக்கும் என்பதைப் பண்டிதர் ஏற்கெனவே அறிவார். சுதேச மன்னர்கள் இதற்கு மாறாக நிற்பர்; அவர்களைப் பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் தட்டிக்கொடுப்பர். ஆகவே இவ்விஷயமாக அந்நிய நேசங்களின் அநுதாபத்தைப் பெறப் பண்டிதர் நேரு விரும்பினார்.

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி, பல அந்நிய நாட்டு மந்திரிகளுடன் அளவளாவிப் பேசினார். ருஷியா, உக்ரேன், சோவியத் குடியரசிற் சேர்ந்துள்ள பல ராஜ்யங்கள், யூகோஸிலோவாக்கியா, போலந்து, நோர்வே, மெக்ஸிக்கோ முதலாம் நாடுகள் இந்தியா குடியரசாகும் விஷயத்தில் போதிய அநுதாபமுடையனவாக அந்நாட்டுப்பிரதிநிதிகளால்ஸ்ரீமதி விஜயலக்ஷ்மிக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியாக உலகத்திலே யுள்ள பல அந்நிய நாடுகளின் அநுதாபமும் உதவியும் கிடைக்கும் என்ற துணிவின்பேரிலேயே, முஸ்லீம்லீக்கினுடைய ஆதரவு தம் தீர்மானத்துக்கு இல்லாமலேயே பண்டிதர் நேரு தம் குடியரசுத் தீர்மானத்தை அரசியல் நிர்மாண சபையில் எடுத்தாண்டார். இத்தீர்மானத்தை அரசியல் நிர்மாணசபை ஏற்றுக்கொண்டால், அதன்படி நடப்பதை பிரிட்டிஷாரோ, லீகரோ அல்லது சுதேச சமஸ்தானங்களோ தடுக்க முன்வந்தால், அவர்களுக்கெதிராக, இப்பிரச்சினையை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் சமர்ப்பித்து, இந்தியக் குடியரசுக் கொள்கையைப் பாதுகாக்க, அவர் அந்நிய நாடுகளின் உதவியை நாடுவார். இந்த விபரத்தை லண்டன் ஈவினிங் நியூஸ் பத்திரிகையின் இந்தியா நிருபர் தெரிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியவருஷ
மார்கழி கசு உ செவ்வாய்க்கிழமை

## 1946-ம் ஆண்டு

இந்த ஆண்டு இன்றோடு முடிவெய்துகின்றது; இந்தச்சந்தர்ப்பத்தில் இவ்வாண்டில் நிகழ்ந்த பிரதான நிகழ்ச்சிகளையேனும் ஒரு முறை ஞாபகப்படுத்திக் கூறுதல் முறையாகும்; இந்த 46-ம் ஆண்டில் உலகமக்களுக்கு நேர்ந்த நன்மை அற்பமென்றும், தீமை அதிகமென்றுங் கூறுதல் மிகையாகாது; ஜர்மனியர் இல்லையேல் யப்பானியர் இந்த நாட்டின்மீது இனிமேல் வெடி குண்டு போடப்போவதில்லை, யப்பானியர் இந்த இலங்கையைக் கைப்பற்றி ஆளப் போவதில்லையென்ற தேற்றம் இங்குள்ள மக்களுக்கு இந்த ஆண்டிலே யுண்டு; இந்தத் தேறுதல், இனிவரும் சில ஆண்டுகளிலும் உண்டென நாம் எண்ணிக்கொள்ள இடமுண்டு; இவ்வொரு ஆறுதலுமே இங்குள்ள மக்களுக்கு இவ்வாண்டிலே நிகழும் பெரும் ஆறுதலெனலாம்.

ஏனைய சம்பவங்களெல்லாம் சிந்தனைக்குரியன; இங்குள்ள மக்களின் உணவு உடை இன்னும் வாழ்க்கைக்குரிய இன்றியமையாப் பண்டங்கள், பொருளாதாரமென்னுமிவைகள் விஷயமாக இந்த ஆண்டில் நேர்ந்தனவற்றை மீட்டு மொருமுறை சிந்திக்கப் புகில், இரண்டாம் உலக யுத்தம் நடந்த காலமாகிய ஆறு ஆண்டுகளைக் காட்டிலும் இந்த 46-ம் ஆண்டிலேயே, மேலே சொல்லப்பட்டவை மிகவும் மோசமான நிலைமையிற் காணப்படுகின்றன; இங்குள்ள மக்களிடத்தில், யுத்தம் நேர்ந்த ஆண்டுகளிற் போதிய பொருளாதார மிருந்தமையினால், அக்காலத்திலே உணவுக்கும் உடைக்குமுரிய பொருள்களையும், தம் வாழ்க்கைக்கு இன்றியமையா ஏனைய பண்டங்களையும் மக்கள் அதிக விலை கொடுத்தேனும் வாங்கும் ஆற்றலுடையவர்களாயிருந்தார்கள்; ஆனால் இந்த 46ம் ஆண்டில் வருவாய்க்குரிய தாபனங்களும் ஏதுக்களும் அகன்றுவிட, மக்களுட் பலர் தொழிலற்றோராக, இதனாற் பணப் பஞ்சம் நேர, இதனோடுஉணவுப்பொருள் உடைப் பொருள்களின் விலையதிகப்பட, விலையேறிய இப்பொருள்களுட் சிலவற்றை, வேண்டிய காலத்திலே பெறுதல் இயலாதாக, இங்குள்ள மக்கள் தங்கள் உடம்பையும் உயிரையுங் கூட்டிவைத்து வாழ்தற்குப் படுங் கஷ்டம் சொல்லமுடியாததெனலாம்; இந்நாட்டிலே பஞ்சம் இப்போதைக்கு எம்மை விட்டகலுதற்காகிய நன்மையோடு கூடிய ஏதுக்களையுங்கண்டிலேம்.

எங்களுடையஇந்தநாடுபோக, எங்கள் அயல்நாடாகிய இந்தியாவின் விஷயந்தான் நன்மையாக விருக்கின்றதோவென்று பார்த்தால், அதுவும் நன்மையாக இல்லை. ஒரு நாட்டிற்கு நேரக்கூடிய பஞ்சம் கலகம் கொலைகளவு இன்னும் என்ன என்ன அநர்த்தங்களோ அவைகளெல்லாம் இந்த ஆண்டிலே நேர்ந்து வந்தன வெனலாம்; அவைகள் இப்பொழுது நேர்ந்து முடிந்துவிட்டனவோ என்றால், முடியவில்லை; இன்னமும் பல அநர்த்தங்கள் நேருமென்றே சொல்ல ஏதுக்களுண்டு; இந்தியநாட்டு மக்கள் கைத்தொழில் விவசாயம் முதலிய முயற்சிகளிலே இந்த ஆண்டிலே சற்று விருத்தியடைந்து வருதலாகிய ஒருபெரும் நன்மையுண்டுஎன்று சொல்லலாம்.

இனி உலகத்திலே அதிகாரத்தோடு கூடிய மக்கள் வசிக்கும் மேலைத் தேசங்களின் செய்தியெப்படியென்று அவதானித்து ஞாபகப்படுத்திப் பார்த்தால், கொடிய யுத்தமும், யுத்தங் காரணமாக நேர்ந்த பொருட்சேதம் உயிர்ச்சேதங்களும் இந்த ஆண்டிலே ஒரு அளவிற்கு ஒழிந்துவிட்டனவெனினும், வெற்றியடைந்த அதிகாரிகள், தோல்வியடைந்த தலைவர்களில் யுத்தத்திலே மாளாது எஞ்சியுள்ளவர்களைச் சிறைப்படுத்தி, யுத்தக்குற்றவாளிகளெனக் குற்றம்பாரித்து, தாங்களே நீதிபதிகளாய் விசாரணை செய்து, பகைவருட் பலருக்கு மரணதண்டனையும், சிலருக்குச் சிறைத் தண்டனையும் விதித்து, அவர்கள்வாழ்க்கைக்கு முடிவு தேடிவிட்டனரெனினும், அந்த வெற்றியடைந்த சாதியார் அடையவிருந்த உலக சமாதானமும், அதனால் விளையுமெனக் காத்திருந்த மனச் சமாதானமும் இன்னமுங் கைகூடியபாடில்லையெனலாம்; வெற்றியடைந்த ஐக்கிய ராச்சியத்தினர்க்கிடையிலே பிணக்குக்கள் இன்னமும் நேராதொழியவில்லை; இதனால் அரசியல் ஞானிகள் சிலர் மூன்றாம் உலக யுத்தமும் ஒருபோது நேருமோ என எண்ணி அஞ்சுகின்றனர்; நேர்வதும் நேராதொழிவதுமாகிய எல்லாம் இறைவன் செயலாகும்.

இந்த ஆண்டின் நிகழ்ச்சிகள் இங்ஙனமாக, நாளைக்குப் பிறக்கும் 47ம் ஆண்டிலாயினும் மக்களுக்கு ஏதும்நன்மை வாராதோ என்றால், அந்த ஆண்டும் இப்பொழுது மங்கலத்தோடு ஆரம்பிப்பதாகப் புலப்படவில்லை; பின் நிகழவிருப்பதை முந்தியே சொல்லும் ஞானம் எங்களுக்கில்லை; ஆதலால் நடப்பதை இருந்து மன ஆறுதலோடுபார்த்தலே செய்யத்தக்கதாம்.

---

### அவசரக் கூட்டம்

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியா விஷயமாகத் தமது அறிக்கைக்கு இப்போது கொடுத்துள்ள வியாக்கியானத்தைப்பற்றி ஆலோசிப்பதற்காக அகில இலங்கைக் காங்கிரஸ் சபையின் அவசரக் கூட்டம் ஒன்று ஜனவரி[illegible] கூடும்.

# பொலிஸ் தலைவர் யார்?

## சேனநாயக்காவா? அலுவிகாரையா?

இலங்கையிலே பிறந்து, இலங்கையிலே வளர்ந்த, எங்கள் சொந்தமனுஷராயுள்ளஒருவர் ஓர்உயர்பதவியை அடைவரானால், நாம் சந்தோஷப்படத்தான் வேண்டும். ஆனால் மிஸ்ரர் அலுவிகாரை பொலிஸ்பகுதிக்கு அதிகாரியாக நியமிக்கப்பட்டதையிட்டு நாம் சந்தோஷமடைய முடியாது என்று இலங்கை சமசமாஜக்கட்சித் தலைவர்களுள் ஒருவராகிய மிஸ்ரர் பிலிப் குணவர்த்தன சென்ற வியாழக்கிழமை பாணந்துறையில் நிகழ்ந்த ஓர் கூட்டத்திற் கூறினர். இப்போதுள்ள நிலைமையிலே, மிஸ்ரர் சேனநாயக்காதான் இலங்கையின் தான் தோன்றிச் சர்வாதிகாரி; எனவே அவர்தான் உண்மையான பொலிஸ் அதிகாரியாக விருப்ப, மிஸ்ரர் அலுவிகாரை பெயருக்கு மாத்திரம் அந்த உத்தியோகத்தை வகிப்பார் என்று மிஸ்ரர் குணவர்த்தன கூறினர்.

இன்னும் இலங்கையிலே இப்போதுள்ள நிலைமை சம்பந்தமாக மிஸ்ரர் குணவர்த்தன பின்வருமாறு குறிப்பிட்டார்.

"இப்போது இந்த இலங்கையிலே வேலையில்லாக் கொடுமை அதிகரித்துக்கொண்டு வருகிறது. இந்த நாட்டில் இக்கொடுமை நீங்கவேண்டுமானால், இப்போதுள்ள முதலாளிவர்க்க மந்திரிமார் நீங்கவேண்டும். தொழிலாளர் பிரதிநிதிகள் அடுத்த பாராளுமன்றத்துக்குப் போகவேண்டும். தொழிலாளருடைய அரசாங்கம் நிறுவப்படல் வேண்டும்.

"இன்று வழங்கப்பட்டுள்ள சம்பளத்திட்டத்தினால், செல்வராயுள்ளார், இன்னும் அதிகம் செல்வராக, வறியவர்கள் இன்னும் அதிகமாக வறுமைக்குள் அகப்பட்டுவிட்டார்கள். இதுதான் சேனநாயக்காவின் சகாயத்திட்டம்."

16 வருஷகாலம் ஆட்சி செய்த பின்னும், சேனநாயக்காக் குழுவினர் இந்த நாட்டுக்கு எவ்விதமான நன்மைகளும் செய்யவில்லை என்று மிஸ்ரர் பெர்னாட் சொயிஸா கூறினர்.

ஐக்கிய தேசியக்கட்சி, பஸ் சொந்தக்காரரிடம் பெருந்தொகையான பணம் சேகரித்திருக்கிறதென்றும், பஸ் முதலாளிமாரின் நலன்களைப் பாதுகாக்க வாக்களித்திருக்கிறதென்றும் மிஸ்ரர் ஜே. பெரீரா கூறினர்.

# குறிப்புக்கள்

**யுத்தபீதி**

1946-ம் ஆண்டு முடிந்து 1947-ம் ஆண்டு பிறக்கப்போகிறது. இந்த ஆண்டுடனாவது உலகிலே யுத்தபீதி அகன்று சமாதானம், அமைதி என்பன நிலவுமா? இது ஆசங்கைக் கிடமா யிருக்கின்றது. இன்று உலக வல்லரசுகளின் நிலைமையை நோக்குமளவில், அவை மற்றக் கொடிய யுத்தத்துக்குத் தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றன என்றே சொல்ல வேண்டும். சமீபத்தில் ஆங்கில அமெரிக்கக் கட்சியினர் ஈரான் நாட்டுக்குரிய எண்ணெய்க் கிடங்குகள் சம்பந்தமாகச் செய்துள்ள ஒப்பந்தம் உலக சமாதானத்துக்குநல்லஉற்பாதமாகக் காணப்படவில்லை. வெளித்தோற்றத்துக்கு இந்த எண்ணெய்ஒப்பந்தம், கேவலம் சாதாரண வர்த்தக முறையைக் கொண்டுள்ளதெனினும், இது ருஷியச் செல்வாக்கு மத்திய கிழக்குப் பகுதியில் பரவாமலிருப்பதற்காகவும், சமயம் நேர்ந்தால், ஆங்கில அமெரிக்கக் கட்சி ருஷியாவைத் தாக்கும் ஓர் கேந்திர ஸ்தானமாக்குதற்காகவும் செய்யப்பட்டுள்ள ஓர் நடைவடிக்கையேயாகும். உலகத்திலே சமாதானத்தையும், அமைதியையும் நிலைநாட்டுதற்காக, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைக் கூட்டி அங்கே பரக்கப் பேசும் இந்த வல்லரசுகள, வேலியே பயிரை மேய்ந்தவாறு கருமம் ஆற்றி வருமானால், ஒன்றின் கழுத்தைத் திருக மற்றது சமயம் பார்த்துக்கொண் டிருக்குமானால், உலகில் சமாதானம் ஏது? சாந்தி ஏது?

**நல்ல முன்மாதிரி**

மானிப்பாய் மத்திய சமரசச் சபை, கடந்த மூன்றுமாத காலத்துக்குள்ளும், 13 வழக்குகளைச் சமரசமாகத் தீர்த்து வைத்திருக்கிறது என்று அறிகிறோம். இது பாராட்டற்குரிய ஓர் நல்ல முன்மாதிரியாகும். கிராம மக்களிடையே ஏற்படும் பிணக்குகள், நீதிஸ்தலத்திற்குப் போய், அங்கே வழக்காளி, எதிரி என்னும் இருசாராரும் பணம் செலவழித்து அரிய நேரத்தை வீணாக்கி ஈற்றில் பரஸ்பரம் நட்டம் அடைவதுதான் கைமேற் பலன். இதனை நிவிர்த்தியாக்குதற்குக் கிராமப் பெரியார்கள் முன்வந்து, கிராமப் பஞ்சாயத்துக்களை நிறுவி, அவற்றின் மூலமாக, கிராமவாசிகளுக்கிடையே ஏற்படும் அற்ப பிணக்குகளைத் தீர்த்தல் வேண்டும். இவ்விஷயத்தில் மானிப்பாய் மீண்டும் இலங்கைக்கே முன்மாதிரி காட்டியிருப்பதையிட்டுப் பாராட்டுகிறோம் இதற்கு மூலகாரணராக விருந்து, இது போன்ற கிராமப் புனருத்தாரண கைங்கரியங்களில் உழைக்கும் மானிப்பாய்க் கிராமச்சங்கத் தலைவர் ஸ்ரீ லி தியாகராஜா அவர்களையும் நாம் பாராட்டுகிறோம். அரசாங்கசபை, பாராளுமன்றம் என்பவற்றுக்குள்ளே நுழைவதன் மூலம்தான் தேசசேவை செய்யலாமென முளைத்து வெளிவரும் நவீன அரசியல்வாதிகளுக்கு மானிப்பாய்க் கிராமச் சங்கத் தலைவர் தமது மகத்தான சேவையினால், தக்க பதில் கொடுத்திருக்கிறாரென்பதே எமது நம்பிக்கை. இப்படியான கைங்கரியங்களில், ஏனைய கிராமச் சங்கங்களும் ஈடுபட்டுக் கிராமப் புனருத்தாரணத் தொண்டில் உழைக்குமாக.

---

### மன்னிப்பு

உருளிவெளித் தோட்ட விஷயமாகச் சத்தியாக்கிரகம் செய்து, தோட்டத்தை விட்டு வெளியேற மறுத்த தொழிலாளர் பலர்க்கு நீதிஸ்தலத்திற் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது அத்தண்டனையை இப்போது தேசாதிபதி நீக்கி, அவர்களை மன்னித்துவிட்டார் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

---

### இந்தியமட்கலங்கள்

இந்தியாவில் இருந்து சட்டி, பானை. முதலாம் மட்கலங்கள் இங்கே இறக்குமதியாவதைத் தடுக்க, இலங்கை அரசாங்கம் ஆலோசித்திருக்கிறது. இலங்கையிலுள்ள மட்கலத் தொழிலுக்குப் பாதுகாப்பளிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திர கணிகையர்

[சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்]

திருமூல நாயனர்

பாத்துல கேழும் படைத்த பிரானை
இரந்துணி யென்பர்க ளெற்றுக் கிரக்
கிரந்தா மாக நினையு மடியா [கும்
ரிரந்துண்டு தன்கழ லெட்டச்செய்
[தானே.

கௌதம முனிவரது சாபத்தினுல் தாருகா வனத்து இருடிகள் மீமாஞ்சை மதப் பிரவேசஞ் செய்து அசுத்தராய்த், தாமே சுதந்திரர் என்று நினைத்து ஒழுகுவாராயினர். பரதந்திரர்களாகிய ஆன்மாக்கள் இவர்களைப் பின்பற்றிக் கெட்டுப்போவார்களென்பதையும் "பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்" என்பதையும் எல்லா ஆன்மாக்களுக்கும் உணர்த்துதல் காரணமாகவும் பசுபதியாகிய பரமசிவன், முன்னர்க் காமமும் கோபமும் அவர்களுக்குண்டாக்குவதாகிய திருவுருவைப் பொருந்திச் சென்று காமிகளுங் கோபிகளுமாகச் செய்து, அவர்களுடைய ஆணவ மலத்தையுங் கருமத்தையு மழித்து, ஞானத்தைப் பயப்பதாகிய திருமேனியைக் காட்டி, மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்துச் சுத்த வைதிக சைவர்களாக்கும்படி திருவுள்ளங்கொண்டார். அமலனுர் அதிபாதகர்களாகிய முனிவர்களுக்குத் தம்முருவங்காட்டவெண்ணுமையின், மஹாவிஷ்ணுவையழைத்து மோகினி வடிவங் கொள்ளும்படிசெய்து, முனிவர்களை மயக்க விடுத்து, அற்ப பாதகிகளாகிய முனி பத்தினிமாரை மயக்கியருளும்பொருட்டுத் தாம் பிக்ஷாடன மூர்த்தங்கொண்டு மோகினியுடன் சென்றருளினர். மோகினி தபோவனத்தை அடைய முனிவர்கள் கண்டு மிகக் காமிகளாகி அவர்க்குப்பின் சென்ருர்கள்.

பிக்ஷாடன மூர்த்தியுடைய திருமேனியிற் பொருந்திய உபவீதம் ஞானரூபி என்பதைக் குறிக்கும். திருக்கரத்திற் பரித்தருளிய சூலம் முச்சத்தி வடிவானதும் மும்மலங்களை நீக்குவதுமாயுள்ளது. அன்பாிய பிக்ஷையை ஏற்றருளும் பிக்ஷாபாத்திரம் பராசத்தி ரூபமாம். உடுக்கை சிருட்டி ரூபமாம். விபூதிப்பை சிவஞான ரூபமாம். திருவடியிற் பொருந்திய பாதுகை திரோதான சத்தி வடிவமாம்.

இங்ஙனமாகத் திருவடிவங்கொண்ட பிக்ஷாடன மூர்த்தியானவர் முனி பத்தினிமார்களுடைய வீதியிற்போய் அவர்களைச் சுத்தராக்கும்பொருட்டுத் தமது திருவுருவைக் காட்ட அவர்கள் பிக்ஷையிடும்படி வந்து காமித்துப் பேராசை வைத்துப் பார்வை மாத்திரத்திலே கருப்பவதிகளாயினர்; அக்கருப்பத்தில் உற்பத்தியானவர்களே உருத்திர கணிகையர் என்று சொல்லப்படுகின்றனர். இது காமிகாகமத்திலே, 'பூர்வத்தில் தேவதாரு வனத்திலே வி?ஞதத்தின் பொருட்டு என்னுற்சிறந்தவடிவத்தையடைந்து புகுதல் செய்யப்பட்டது. அங்குள்ள முனிபன்னியர்கள் என்னைக் கண்டு ஆதரத்தோடு பொருதவர்களாய்க் காமத்தால் வருந்தி, நாம் அருளோடு பார்த்ததனுற் கருத் தரித்தனர்; அக்கருப்பத்திற் ருேன்றியவர்களே உருத்திர கணிகையர்; அவர்கள் என்னுடைய தொழிலில் நியமிக்கப்பட்டனர்" என்று கூறப்பட்டமையினுல் உணரத்தக்கது.

இந்த உருத்திர கணிகையருடைய தொழில் பேதம் ஆதியனவற்றைக் காரணம் சூட்சுமம் முதலிய ஆகமங்கள் விரிவாகக் கூறும். உருத்திரகணிகையர்கள் சிவபத்தியும் சிவனடியார் பக்தியும், சிவகைங்கரியச் சிறப்பும் மிக்க மணிகளேயாவர். அவர் குலத்திலே சிறந்த ஒளியுடைய மணி பிறந்ததுபோல, கமலினியூர் இறைவன் ஆணைவழியே கமலையாகிய ஆரூரில் பரவையார்என்னுந் திருநாமத்தோடு அவதரித்ததாகப் பெரியபுராணங் கூறும். பரவை அம்மையாருடைய தோற்றத்தைக் கூறுமிடத்தில் "கதிர் மணி பிறந்ததென்ன வுருத்திர கணிகைமாராம் பதியிலார் குலத்திற் ருேன்றி" என்று சொல்லப்பட்டிருக்கிறது,

உருத்திர கணிகையர்கள் சன் மார்க்கி, சகமார்க்கி, புத்திரமார்க்கி, தாசமார்க்கி என நான்கு மார்க்கங்களை உடையவர்களாயினுர்கள்என்று காமிகாகமம் கூறும். உருத்திர கணிகை தேவதாசிகள் என இருவகையினர் எனவும், தேவதாசிகள் ஆறு பிரிவினர்எனவும் காரணுகமம்கூறும். உருத்திர கணிகையர்க்கு அலகிடன் முதலியன இல்லை; அவர்களுக்கு ஆலாத்தி பாடல் ஆடல் முதலிய தொழில்கள் விதிக்கப்படுகின்றன, அச்சத்தாலாயினும் குலத்திற் பிறந்த அபிமானத்தாலாயினும், பிற காரணத்தாலாயினும் உருத்திர கணிகையர்கள் விசேஷமாக எல்லாக் கருமங்களையுஞ் செய்வரர்கள். ஐந்து வயசுக்கு மேற் பயிற்றப்பட்டவர்களாய், சிவகீதங்களைப் படித்துப் பயின்றவர்களாய், ஐம்பது வரையினதாம் வயசுடையவர்களாய் இருப்பவரே தொழிலுக்கு யோக்கியராவார்.

நிருத்த காலம்

பிரதிஷ்டை, சம்புரோக்ஷணை, பிராயச்சித்தம், உற்சவம், ஸ்பனம், மாசபூசை, ஓமகருமம், துவசாரோகண காலம் முதலியவைகளிலும் காமிய கருமம் முதலியவைகளிலும் உருத்திரகணிகையர் விசேஷமாக நிருத்தஞ் செய்யவேண்டுமென்று காமிகாகமத்திலும், தீபாராதன காலம், பூஜாந்தம், பலிகாலம் என்னுமிக் காலங்களிலும் நித்தியோத்சவாந்தத்திலும் உருத்திர கணிகையர் சுத்த நிருத்தஞ் செய்யவேண்டு மென்று சூட்சுமாகமத்திலும் செப்பப்பட்டுள்ளன.

வெண்மதியின் கொழுந்தணிந்த
வீதிவிடங்கப்பெருமான்
ஒண்ணுதலார் புடைபரந்த
வோலக்க மதனிடையே
பண்ணமருமொழிப் பரவையார்
பாடலாடறனைக்
கண்ணுறமுன் கண்டுகொண்டார்
போலக்கருதினுர்.

எனவரும் சேக்கிழார் நாயனுர் வாக்காலும் இம்மரபினர் புரியும் திருக்கோயிற் பணிகள் விளங்குகின்றன.

சிவாகமங்கள் விதித்த கருத்துக்களடங்கிய பாட்டுக்களின் பொருளை அபிநயத்தாற் (முத்திரை) காட்டுவது சுத்த நிருத்தமாம். என்னை யருச்சிப்பது எவ்வளவோ சிரேட்டமாகுமோ அவ்வளவு பரதசாஸ்திரத்திற் கூறிய நிருத்தமு மெனக்காகும் என்பது சிவாகம வாக்கு. பரதசாஸ்திரமென்பது மூலாகமம் இருபத்தெட்டினுள் ஒன்ருகிய புரோத்கீதத்தின் உபபேதம் பதினுறனுள் ஒன்றென்க. பரதருடைய நாட்டிய சாஸ்திரமும் நந்திகேசுரர் இயற்றிய அபிநய தருப்பணமும் முத்திரைகளைப்பற்றி விரிவாகப் பேசுகின்றன. அபிநயங்கள் முகத்தினுலும் கண்களாலும் கைகளாலும் பிற அங்கங்களாலும் காட்டப்படும். கரங்களினுலே காட்டப்படும் அபிநயங்கள் ஒரே கையாற் காட்டுவனவும் இரு கரங்களாலும் காட்டுவனவும் என இருவிதமாகப் பிரித்துச் சொல்லப்படும். ஒற்றைக் கையாற் காட்டுவன பதாகை முதலாக முப்பத்துமூன்று வகைப்படும். விரித்த பெருங்கொடிபோ லிருத்தலின் பதாகை எனப்பட்டது. பதாகை-பெருங்கொடி இரண்டு கைகளையும் இணைத்துக் காட்டும் அபிநயங்கள் அஞ்சலி புஷ்பாஞ்சலி முதற் பதினைந்து வகைத்தாம். இவற்றி னிலக்கணங்களைச் சிலப்பதிகார உரையிற் காணலாம்.

பிரமதேவர் பிராதக் காலத்துக் கதிபர்: விஷ்ணு மத்தியான காலத் ததிபர்; உருத்திரர் சாயங்காலத் ததிபர்; முக்காலங்களுக்கும் காமிகாகமங் கூறும் தோத்திரக் கருத்தடங்கிய தமிழ்ப்பாடங்களைப் படித்து வணக்கத்துடன் முத்திரையோடு பூஜாந்தத்திற் செய்வது புஷ்பாஞ்சலி யெனப்படும்.

உருத்திர கணிகையருடைய அலங்காரம் எப்படியெனில் அதனை ஆகமம் மேல் வருமாறு கூறும். அவர்களுக்கு வஸ்திரந் தரித்தல் முதலியவற்றிற் பிரமாண ஸ்திரீகளோடு ஒப்புமையுண்டு. மயிரை மேலே கட்டலும் வஸ்திரங்களுக்குக் கீழ்க் கஞ்சுகந் தரித்தலும் சிவதீட்சை முன்னுகத் திரிபுண்டரந்தரித்தலுமாம். விருத்தபாலரென்னும் நியமமில்லை. சிவசந்நிதியில் மங்கலிய சூத்திரந் தரிக்கற்பாலது எனக் காமிகாகமங் கூறும்.

உருத்திர கணிகையர் முதலில் திருநந்தி தேவராலும் பின்பு சண்டேசுரராலுந் தீக்ஷிக்கப்பட்டவர்கள். உருத்திர கணிகையரது வமிசத்திற் பிறந்தவர்கள் நிருத்த பஞ்சாசாரியர் எனப்படுவர். அவர்கள் ஆட்டுவான் மர்த்தகன் பாடுவான் ஊதுவான் முரசு கொட்டுவான் என ஐவர் என்று காமிகாகமத்திற் சொல்லப்பட்டது.

சிவப்பிரீதிகரமாகிய நிருத்தம் முதலியவற்றுக்குப் பலன் என்னையெனில் காரண சுருதியானது பின்வருமாறு விளம்புகின்றது. நிருத்தம் வியாதி நீக்கத்தையும் சுத்தநிருத்தம் உலக சுகத்தையும் கொடுக்கும். தாளம் மூவுலகத்தையும் வசீகரிக்கும். வீணை வாசித்தலாற் புகழுண்டாம். நரம்பு வாத்தியத்தினுற் கோடியாகஞ்செய்த பலனுண்டாம். கீதத்தினுல் புத்திர பௌத்திர விருத்தியுண்டாம். மத்தளம் சௌக்கியத்தை உண்டுபண்ணும்; பேரியாற் புஷ்டியுண்டாம். சங்குநாதத்தினுற் சத்துரு நாசமுண்டாம்.

—வரும்.

---

உ
ஸ்ரீ முனிஸ்பரன் துணை

யாழ்ப்பாணம் கோட்டை ○
○ ஸ்ரீ முனீஸ்வரப்பெருமான்

## திருவெம்பாவைத் திருவுலா விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

நிகழும் விய வருஷம் 13-ந் திகதி (28—12—46) சனிக்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம் கோட்டைஸ்ரீமுனீஸ்பரன் கோவிலில் திருவெம்பாவைப்பூசைநடைபெறுகின்றது. அன்று முதல் 10 நாட்களுக்கும் விஷேச அபிஷேக ஆராதனையும் இரவு மேளக்கச்சேரிகளும் சங்கீதக்கச்சேரிகளும் நடைபெறுகின்றன. அத்தருணம் அன்பர்கள்யாவரும் வந்து ஸ்ரீமுனீஸ்பரப்பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
ஷை கோவில் சொந்தக்காரன்.

யாழ்ப்பாணம்,
Mis 284 27 & 31—12—46.

---

## பத்ததிப் பாடல்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னுயி ரெல்லாம் வணங்கவே
வணங்கும்
சேவக மில்லாச் சீவகாருண்யன்
பாவ நாசம் பரிந்திட வறப்போர்
பூசுரனென்று புவிமிகப் போற்றும்
தேசிக ரிவரைத் தெளிவ தின்றியே
இன்னண முரைத்தீ ரென்றுமே
மன்னன்
சொன்ன வாசகம் கேட்டொரு
ருத்திரன்
... ... ... ...
... ... ... ...

இவ்வாறே தொடர்ந்து ஈற்றில் ஓர் விருத்தமும் பெற்று முடிகிறது இந்நூல், நூலின் இறுதியிலும் கடவுள் வாழ்த்துக்கூறி முடிக்கிருர் கவிஞர். இந்நூலை வழுக்களைந்து வெளியிடத் தமிழறிஞர்கள் முயற்சிப்பார்களென நம்புகிரேும்.

---

### தற்கொலை

பிரபலஸ்தரான சேர் திக்கிரிபண்டா பணபொக்கையின் குமாரரான 21 வயதுடைய காமினி பணபொக்கை என்னும் வாலிபர் சென்ற சனிக்கிழமை கழுத்திற் சுருக்கிட்டுத் தற்கொலை செய்திறந்தார் என்று ஓர் செய்தி கூறுகிறது. இந்த வாலிபர் இன்னும் சில தினங்களில் இங்கிலாந்துக்குப் போவது என ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

---

## கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும்' மேகம் மேசத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும், கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி
பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம், சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 211 1-11—30-4 (செ)

---

## உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

*

அப்படியானுல்

## இந்துசாதனத்தில்

விளம்பரஞ் செய்யுங்கள்

---

## தேவை

வண் - மத்திய ஐக்கிய பண்டசாலைக்கு இருசிப்பந்திகள் (Salesmen) தேவை, அனுபவத்துக்குத் தக்கவாறு மாத வேதனம். வருகிற தை மாதம் 10-ந் திகதிக்கு முன் பின்குறிக்கப்படும் விலாசத்துக்கு மனுச் செய்யவும்.

V. S. நடராசா
காரியதரிசி
Proctor S. C.
Vannarponnai

Mis 31—12—46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் பெருமை!

## அதனை நிலைநாட்ட வேண்டும்

(நமது நிருபர்)

"நானும் இந்த அகில இலங்கைத் தமிழர் மகாநாடும், சிங்களர்க்கு விரோதமானவர்கள்; எனவே தமிழர் காங்கிரசுக்கு ஆதரவு கொடுக்கக் கூடாது என்று ஓர் சிலர் இரகசியமாகச் சொல்லித் திரிவதை நான் அறிவேன். நஞ்சுடைமை தான் அறிந்து நாகம் கரந்துறையும் என்றபடி இப்படியாக விஷமப்பிரசாரம் செய்து திரியும் வீர தீரப் புலிகள், தம் நச்சுச் தன்மையை உணர்வதினாலேயே பகிரங்கத்தில் வருகிறார்கள் இல்லை. ஆனால் இப்படிப் பொய்யும் புளுகும், கற்பனைக் கதைகளும் கூறித் திரியும் பொய்யர் கூட்டத்துக்குத் தமிழ்ச் சமூகம் தக்க பாடம் படிப்பித்து, அவர்களை இந்த நாட்டில் இனியும் தலைக்காட்டா திருக்கக் கருமம் ஆற்றும் காலம் தூரத்தில் இல்லை. நான் சிங்கள மக்களுக்கு விரோதமானவன் அல்ல. சிங்கள மக்கள் எங்கள் சொந்தச் சகோதரர்கள்; அவர்களும் தமிழராகிய நாமும் ஒரே தாய் பிள்ளைகள்: நாம் இருவரும, இலங்கையில் வதியும் வனைய ச கத்தினரும்; என்றென்றும் ஒத்தே வாழுவோம். செனநாயக்காக்களும், வனையோரும், எங்கள் ஒற்றுமையைப் பங்கப்படுத்த முடியாது. ஆனால் நாங்கள், இந்த நாட்டிலே சிங்களர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் முதலாம் சாதியினரின் இரத்தத்தைப் பிழிந்து குடித்து ஏப்பமிட்டு, ஏழை மக்களைத் தவிக்கச் செய்து, இந்நாட்டு மக்களை உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி, அரைநிர்வாணக் கோலத்துடனும், எலும்பும் தோலுமாகிய உருவத்துடனும் விடுத்து, தாம் மாத்திரம் இந்திரபோகம் அநுபவித்துவரும் செனநாயக்காக் கோஷ்டிக்குச் சத்துரு; அதில் நான் பெருமையடைகிறேன்: நான் மாத்திரமல்ல, தென் இலங்கையில் உள்ள சிங்களச் சகோதரரிற் பல்லாயிரவர், செனநாயக்காவின் பகல் வேஷத்தைக் கண்டுவிட்டார்கள்: இந்த முதலாளிக்கோஷ்டி ஒழியும்காலம் வந்துவிட்டது. அவர்களை ஒழித்து இந்த நாட்டை நன்னிலைப் படுத்துவதில், தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் நிற்க வேண்டும். அதற்குத் தமிழ்க்காங்கிரசைப் பலப்படுத்த வேண்டும்."

இவ்வாறு சென்ற சனிக்கிழமை, கைதடி வித்தியாசாலையில் நிகழ்ந்த ஓர் பிரமாண்டமான கூட்டத்தில், அகில இலங்கைத் தமிழர் மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் கூறினார்.

குறித்த கூட்டம் ஆரம்பமாக முன்னர், கைதடிச் சந்தியில் ஆயிரக்கணக்கான ஜனங்கள், தமிழ்க்காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீமான்கள் ஜீ ஜீ பொன்னம்பலம், வ. வீ. குலசிங்கம், எஸ். ஜே வீ செல்வநாயகம், க சனகரத்தினம், வி. என் கார்த்திகேசு என்பவர்களை எதிர்கொண்டழைத்து மலர்மாலை சூட்டி ஊர்வலமாகக் கைதடி வித்தியாசாலைக்கு அழைத்துச் சென்றனர் கூட்டம் ஆரம்பமானதும், குறைந்த பட்சம் 5000 ஜனங்கள் சமூகமளித்தனர் என்று கணிக்கலாம். இப்படியாக திரளான கூட்டம், முன்னொரு போதும் கூடியதில்லை என்று சொல்லப்படுகிறது,

கூட்டம் பிரமஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது முதலில் நியாயவாதி ஸ்ரீ வ. வி. குலசிங்கம் பேசினார். அவர் பேசியதாவது:

பாராளுமன்றத் தேர்தல் நெருங்க நெருங்க, தமிழ்மக்கள் யாரைத் தெரியலாம், யாரைத் தெரியக்கூடாது என்று கட்டளைகள் வருகின்றன, அப்படிக் கட்டளைகள் விடுகிறவர் யார்? மிஸ்ரர் செனநாயக்கா! எங்கள் பிறப்புரிமை இது. இதனைத் தடுக்க, எந்த அந்நியனுக்காவது உரிமையில்லை. தமிழ்மக்களாகிய நாம் ஆரைத் தெரியவேண்டும், ஆரைத் தெரியவொண்ணாது என்பது எங்களுக்குத் தெரியும். அந்நியர் தலையீடு எமக்கு வேண்டியதில்லை. இப்போது சிலர் மிஸ்ரர் செனநாயக்காவின் கைப் பொம்மைகளாக நிற்கிறார்கள். அவர்கள் கேவலம் பட்டம், பதவிகளுக்காக, எம்மிடையே புகுந்து எமக்குள் பிரிவினை ஏற்படுத்த முனைந்து விட்டார்கள். தமிழராகிய நாம் ஒற்றுமை கொள்ளவேண்டும். அந்த ஒற்றுமை மூலமாக நாம் பலம்கொள்ள வேண்டும். எமக்கென இதுகாறும் ஓர் ஸ்தாபனம் இல்லாதிருந்தபடியால், எங்கள் பிரதிநிதிகள் தம்மனம் போனவாறு கருமம் ஆற்றி எம் சமூகத்தைக் காட்டிக்கொடுத்துவிட்டார்கள் அந்தக் கேவல நிலைமை இனியும் இருக்கவிடவொண்ணாது. தமிழ்க் காங்கிரஸ் மூலமாக நாம் ஒற்றுமை கொள்ளவேண்டும்.

இதன்பின் பேசிய நியாயவாதி ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள், தமிழ்க்காங்கிரஸ் ஓர் வகுப்புவாத ஸ்தாபனம் என்றும், அதனை ஆதரித்தால், சிங்களர் பகைப்பர் என்றும், அதன் பயனாக தமிழ்மக்களுக்கு எவ்விதமான நன்மைகளும் பிற்காலத்திற் கிடைக்கமாட்டாது என்றும்சிலர் "உம்மாண்டி" காட்டுவதைக் கண்டித்துப் பின்வருமாறு கூறினார்.

"வகுப்புவாதம் என்றால் என்ன? நாம் தமிழன் என்று சொல்லி, என் சாதியையிட்டுப் பெருமைப்படுவது வகுப்புவாதமா? என் சாதியை விற்காமல் இருப்பது வகுப்புவாதமா? அப்படியானால் தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பி, இன்று இந்தியா சுதந்திரமாளிகையை அடையச் செய்யும் கைங்கரியத்தில் தமிழ் மக்களை ஏவி விட்ட எங்கள்வீரக்கவி சுப்பிரமணிய பாரதியார் "செந் தமிழ்நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று கூறினாரே! அவர் வகுப்புவாதியா? "தமிழன் என்று சொல்லடா? தலைநிமிர்ந்து நில்லடா என்று கூறியது வகுப்புவாதமா? இல்லை. தமிழ்மக்களாகிய நாம் எமக்குள் ஒற்றுமை பூண்டால் எம் பலத்தை யறிந்து மற்றும் சாகியத்தார் எம்முடன் ஒத்துழைப்பார். பலவானைத்தான் எவரும் கணிப்பர். ஒற்றுமையற்ற, பலமற்ற ஓர் சமூகத்தை எவரும் கணிக்கமாட்டார்கள். நாம் ஒற்றுமை கொள்ளுவோம். உரம்கொள்ளுவோம். எங்கள் நாட்டின் முன்னேற்றம் கருதி மற்றவர்களுடன் ஒத்துழைப்போம். இதற்கெனத் தமிழ் மக்களுக்கு ஓர் ஸ்தாபனம் இருக்கிறது. அதுதான் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ இந்த ஸ்தாபனத்தின்கீழ் நின்று நாம் எல்லாரும் தொண்டாற்றுவோம்"

—வரும்.

### இந்தியர்க்கு உயர் பதவி

உலகக் கலாச்சார மகாநாட்டுக்கு உப அதிகாரியாக ஓர் இந்தியரையே தெரிவு செய்யவேண்டும் என்ற ஆலோசனை இப்போது பலமாக இருக்கிறது, ஆனால் யாரை இப்பதவிக்கு நியமிக்கலாம் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

# பத்ததிப் பாடல்

—: இறைமணி : —

பத்ததி என்பது கிரியை முறைகளை வகுத்துக் கூறும் ஓர் நூல். பண்டைத்தமிழர் தமது நாட் குறிப்புகளையும், முக்கிய செய்திகளையும் இவ்விதபத்ததிகளிற் குறித்து வந்தனர் பின்னர் அரசர்கள் தமது பிரசைகளுக்கு விதிக்கும் ஒழுங்கு விதிகளையும் தேவாலயங்களில் நடைபெறும் முறைமைகளையும் குறிப்பதற்கு இப்பத்ததிகள் உபயோகப்பட்டன. நாகரீக வளர்ச்சியினால் இப்பத்ததிகள் படிப்படியாக மறையலாயின.

இத்தகைய ஓர் பத்ததி 'கவிராஜர்' என்னும் வித்துவ சிரோமணியினால் இயற்றப்பட்டுளது. இவர் "கோணேசர் கல்வெட்டு" என்னும் இன்னொரு நூலையும் இயற்றியுள்ளார். இக்கல்வெட்டு சமீபத்திற்றான் பதிப்பிக்கப் பட்டதாக அறிகிறோம். இக்கல்வெட்டைப்பற்றி இப்பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகளை அன்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

இப்பத்திரிகையின் பிரதியொன்று ஓலைச்சுவடியில் எமக்குக் கிடைக்கலாயிற்று. இச்சுவடியின் ஈற்றில் "கவிராஜர் உதையவிற்பன்னன் பாடிய கலிங்கன் பத்ததி முற்றும்" என்னும் சொற்றொடர் காணப்படுகிறது. இங்குக் குறிப்பிடும் "கலிங்கன்" யாரென்பது விளங்கவில்லை. இந்நூலில் சேர சோழ பாண்டிய அரசர்களே யன்றிப் பல சிற்றரசர்களும் புகழ்ந்து பேசப்படுகின்றனர்.

'பத்ததி' என்னும் இந்நூல் முற்றும் ஆசிரியப்பாவானியன்றது. இதில் சுமார் அறுநூறு அடிகள் காணப்படுகின்றன; இடையிடையே ஏடு சிதைந்து மிக வருந்தத்தக்க நிலையிலுளது, இந்நூல்சாதிப்பகுப்புக்களையும், சாதிகளுக்குரிய தொழின்முறைகளையும் விளக்கிக் காட்டுமொரு களஞ்சியம். அரசியல்முறை, குடிமக்கள் கடன் சாதிசமய சமரசம் என்பவையும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலின் காப்புப்பாடல்

"உயிரொடுயிராய்க் கலந்து நின்றலவும்
தனி முதல் பாதந் தான்றுணை
தருமே"

என்பதாகும்; இனிநூலைக் கவனிப்போம்.

திருவளர் கலிங்கன் செகதலம் புகழ
மருமலர் தேவ தொண்டரை வகுத்து
ஆலய மியற்றி அணி பணி யமைத்துச்
சிலைமோ டானுருச் செய்தாங் கிருத்தி
மறையோன் றன்னை வா வென
வழைத்து
முறையாய்ப் பூசை மூன்றி நேரம்
விறுமன் குலத்தாய் மேவி ஆலயத்தில்
அறுகொடு தருப்பை ஆவின் பால்கனி
நறுநெய் பொங்கல் நல்விள நீரொடு
சிறுதினை நெற்பொரி தேங்காய்
கரும்பு
மற்றொரு மாங்கனி வருக்கை
மோதகம்
அற்புத முடனே அனேக வர்க்கமும்
சேர்த்து நீர்படைத்துச் சிவனுர்க்
கூட்டி
சூத்திர சாதி தொழுதுன்
னூழியம்புரிய
வகுப்பொடு வகுப்பாய் வளமைக
ளறிந்து
செகத்தோர் துதிக்கத் திருவேட்டை
சென்று
ஆடிப்பாடி ஆறியங் கிருந்து
கூடிக் குழாத்தில் குயர்வகைக்
குடுக்கையில்
அமுதுகள் படைத்து அந்தணர்
அளிக்க
தமதுபிற் சூத்திர சாதிக ளெழுந்து
மன்னா! மகிபா! மாநிலத் தரசே!
அன்னா! அந்தணன் அறம்பறித்
திடுவான்
சாதம் புசிக்கில் தனித்துண்
டிருப்பன்
ஓதி லெவர்க்கும் உபதேச மளியான்
ஈயாக் குலத்தோ னிவனிடத்
தருந்திடில்
துய! தோஷம் தொடருமென்
றோதி
வெறுப்புறச் சூத்திரர் வேந்தனும்
வினவ
அண்டத் தமரர் அருளிய தொண்டர்
பண்டுப் பெருமான் பசுபதி நெஞ்சர்
மாசற்ற குலத்தார் மாமிச மருந்தார்
தேசத்தி லுயர்ந்தோர் சிவனடி
தொழுவர்
உடலுழக் கறுப்போர் உழுதா
னுண்போர்
நடைதனி லழகர் நல்லற மிடுவர்
தன்னுயிர் போலத் தரியில
ரனைத்தும்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

# சுயராஜ்யமா?

## இலங்கைக்கு அளிக்கப் பட்டுள்ள அரசியல்

இப்போது இலங்கையில் ஆட்சி புரியும் மந்திரிகள், சோல்பெரித் திட்டத்தினால் இந்த நாட்டுக்குச் சுயராச்சியம் கிடைத்துவிடும் என்று தம்பட்டம் அடிக்கிறார்கள். இது முழுப்பொய் என்று இலங்கைச் சுயராஜ்யக்கட்சித்தலைவரான மிஸ்ரர் ஜேம்ஸ். பீ. பர்னாண்டோ, சென்ற சனிக்கிழமை நிகழ்ந்த ஷை கட்சி வருடாந்தக் கூட்டத்திற் கூறினார், இன்னும் அவர் கூறியதாவது:-

'உண்மையைக் கூறு கால், இலங்கையை செனநாயக்காக் கோஷ்டி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குக் குத்தகையாக விற்றுவிட்டது. குத்தகைக் காரன், தான் நினைத்த நேரம்தான் விட்டு நீங்குவான் அன்றி; சொந்தக்காரன் எண்ணப் படியல்லஎன்று சோல்பெரித்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இதனைத் தான்செனநாயக்காக்கோஷ்டி இன்று சுயராஜ்யம் என்று ஊரெல்லாம் பறைதட்டித் திரிகிறது."

# ஆரம்பமானது

## ஐக்கிய தேசீயக் கட்சிப்பிளவு

யார் யாரை அபேட்சகர்களாகத் தெரிவது என்ற முடிவுக்கு இன்னும் ஐக்கிய தேசீயக்கட்சி வர வில்லை. இதற்கிடையில், கட்சியின் நிருவாகசபையைக் கலந்து ஆலோசிக்காமல், ஓர் முடிவும் செய்யாமல் கட்சித்தலைவரான மிஸ்ரர் டி. எஸ், செனநாயக்கா மீரிகமத் தொகுதிக்குத் தான் அபேட்சகராக நிற்பதாக அறிவித்துவிட்டார். இப்படிச் செய்தமை கட்சி ஒழுங்குகளுக்கு அமையுமா என்று ஐக்கிய தேசீயக் கட்சி அங்கத்தவர்கள கேட்க ஆரம்பித்துவிட்டனர்.

இவ்விஷயத்தில் மிஸ்ரர் செனநாயக்கா தான்தோன்றித் தனமாக நடந்து, இப்போதே தமக்கு இயல்பாயுள்ள சர்வாதிகாரக் கொள்கையைக் காட்ட முன்வந்துவிட்டார் என்றும் இக்கட்சியினர் பேசிக்கொள்ளுகின்றனர். நிலைமை இப்படியே இன்னும் இருந்து, மிஸ்ரர் செனநாயக்கா கட்சி நிருவாகசபையைக் கலந்து ஆலோசிக்காமல் கருமம் ஆற்றுவாரானால், தேர்தற்காலத்துக்கு முன்னரேயே ஐக்கிய தேசீயக்கட்சி அழிந்துவிடும் என்று விஷயமறிந்தவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## துவணவர் வரு படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிப்படப்பட்டுள்ளன.

ஆவ தெல்லையி னடுக்கமுற் றஞ்சியே யங்கண்
மேவு மாதர்மெய் வியர்த்தன ரவ்வியர்ப் பதனிற்
றேவ தேவன தருளினா றினகரத் திரள்போல்
ஓவி லாவிறல் வீரர்க ளிலக்கவந் துதித்தார்.

அச்சமயத்தில் அவ்விடத்தில் நின்ற நவசத்தியர்கள் நடுக்கமடைந்து அச்சங்கொண்டு தம்மேனி வியர்க்கப்பெற்றனர்; அந்த வியர்வையினின்றும், சிவபிரானருளால், பல சூரியரின் கூட்டம்போலக் குறைவில்லாத ஆற்றலைக் கொண்ட இலட்சம் வீரர் வந்து தோன்றினர்களென்பது கருத்து;

ஆவதெல்லையில் - இறைவி சாபமிட்ட சமயத்தில்; நடுக்கமுற்று - உள்ளம் மெய் யென்னு மிரண்டும் நடுக்கமடைந்து; இறைவி திருவுளம் மாறுபட்டுச் சீற்றமடைந்தமையும், அச்சத்தியருக்குச் சாபமிட்டதும், அதனல் அவர்கள் அஞ்சி மனமும் மெய்யும் நடுங்கி வியர்வை யுற்றதும், அவ்வியர்வையி னின்றும் இலட்சம் வீரருந் தோன்றியமையுமாகிய எல்லாம் இறைவனருளால் நேர்ந்தனவாதலின் தேவதேவனதருளினு லென்றுரென்க.

வடுத்த னைப்பொரு கண்ணினர் வியர்ப்பினில் வந்தாங்
கடுத்த மானவ ரோரிலக் கத்தரு மசனி
கடுத்த சொல்லினர் பொற்றகி லுடையினர் கரத்தில்
எடுத்த வாளினர் பலகைய ராகியீண் டினரால்.

மாம்பிஞ் சின்பிளவையொத்த கண்களையுடையவர்களாகிய அந் நவசத்திகளின் வியர்வையினின்றுந் தோன்றிச் செறிந்த இலக்கம் வீரர்களும் இடியிடித்தாற்போன்ற வார்த்தையையுடையராய், பீதாம்பரத்தைத் தரித்தவராய், கையிற் கொண்ட வாட்படைபரிசை யென்னு மிவற்றையுடையராய் முற்பட்டன ரென்பது கருத்து.

[வடுத்தனைப் பொருகண்ணினர் - மாம்பிஞ்சின் பிளவை நிகர்த்த கண்களையுடையவர்] (12)

அனையர் யாவரு மீசனை யடைந்தன ரன்புற்
றினிய வாகிய வமலனு மங்களை யேத்தி
வனைக ருங்கழல் வணங்கிமுன் நிற்றலு மற்றப்
புனித நாயக னவர்தமை நோக்கியே புகல்வான்.

அந்த இலக்கம் வீரர்களும் பரமசிவனுடைய சந்நிதியை யடைந்து பத்திபூண்டு, ஓதுவார்க்கு இதத்தைப் பயக்கும் சிவநாமங்களைச் செப்பி, வீரக்கழலணிந்த பெருமை பொருந்திய திருவடிகளை வீழ்ந்து வணங்கிப் பெருமானுடைய சந்நிதியில் (விநயத்தோடு) நிற்ப, இயல்பாகவே மலமில்லாதவராகிய இறையவர் அந்த இலக்கம் வீரர்களையும் நோக்கிப் பின்வருமாறு திருவாய்மலர்ந் தருள்வாராயின ரென்பது கருத்து.

பத்தியோடு ஓதுவார்க்கு நன்மை பயக்கும் மந்திரங்களாதலின் "இனியவாகிய அமலனுமங்கள்" என்றுர்: புனிதன் என்பதற்கு உயிர்களின் பாசபந்தங்களை யொழித்துப் புனிதஞ் செய்தருளுந் தலைவனெனக் கொள்ளினும் பொருந்தும். (13)

## அறிவித்தல்

### காணி விற்பனவுக்குத் தடை

D. C. J. G. 196

நல்லூர் வேலுப்பிள்ளை கைம்பெண், கண்மணிப்பிள்ளையால் தத்துவம் எடுத்து, வேலுப்பிள்ளையின் பராயமற்ற பிள்ளைகளாகிய

S. V. குணரத்தினம்
S. V. துரைரத்தினம்
S. V. சகுந்தலை

என்பவர்களுடைய பங்கை வருகிற ஜனவரி மாசம் 4-ந் திகதி சனிக்கிழமை பின்வரும் காணிகளில் விற்பதாக, கொம்மிசனர் N. கந்தையா 10-12-46 ல் விளம்பரம் விட்டிருக்கிறுர் இக்காணிகளின் முழுத்தொகையிலும் பங்கிலும் மற்றும் விபரங்களிலும் பிழைகள் இருப்பதால் ஒரு பங்காளியாகிய நான் கோட்டில் தடை கொடுப்பதற்கு ஆயத்தஞ் செய்கிறேன். ஆகையால் திருத்தி வரும்வரையும் எவரும் வாங்காதிருக்கும்படி எச்சரிக்கை செய்கிறேன்.

காணிகளின் விபரம்

1 வண்ணர்பண்ணை கிழக்கிறை:— தாண்டிக்குளங்கரையும் உப்புக்குளந்தலைமடையும் ஐஞ்ஞூற்றுவனும் மறுபிரிவுகளும் கெற். பர. 8 குளி $2\frac{2}{3}$ இதிற் சொரியலாய் $\frac{1}{4}$ பங்கு.

2 ஷையிறை:—உப்புக்குளங் கரையும் மறுபிரிவுகளும் கெற் பர. 16 இதிற் சொரியலாய் $\frac{1}{4}$ பங்கு.

N. B. இக்காணிகள் 1483, D. C. J. இலக்க வழக்கில் பிரிவிடுதலிலிருக்கிறது

M. J. இக்னேஷஸ்

யாழ்ப்பாணம்
30—12—46

Mis 288—31-12-46

## சதானந்த வித்தியாசாலை அளவெட்டி

### பெற்றுர்தின விழா

அளவெட்டி சதானந்த வித்தியாசாலை மண்டபத்தில் (22-12-26) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் அவ்வித்தியாசாலைப் பெற்றுர் தின விழா அரசாங்க சபை அங்கத்தவர் திரு. சு. நடேசன் தலைமையில் நிகழ்ந்தது பாடசாலைச் சிறுமியரால் வரவேற்புப் பாக்கள் பாடப்பட்டன. பாடசாலைத் தலைமை யாசிரியர் தமது அறிக்கையில் அவ்வித்தியாசாலையின் சென்ற ஆண்டாய பதினுருவதாண்டுச் சிறப்புக்களை விளங்க விரித்துரைத்ததோடு புதிய கல்வித் திட்டத்தின்படி எதிர்காலத்தில் அவ்வித்தியாசாலை சமயம், மொழி என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு மாணவரின் வாழ்க்கை வளர்ச்சிக்கு வேண்டிய கலைகளைப் பயிற்றலில் ஈடுபடுமெனவும், ஆங்கிலம் கூடுதலாக இடம் பெறுமெனவும் தெரிவித்தார். இன்னும் ஆசிரியரை நியமித்தல் உபகாரப் பணம் உதவுதல் என்பவற்றில் அரசாங்கம் புதிய கல்வித் திட்டத்தினபடியும் ஆங்கில பாடசாலைகளுக்கும் சுயபாஷா பாடசாலைகளுக்குமிடையே பட்சபாதமான முறைகளைக் கையாளுவதாகவும் எடுத்துரைத்தார். தலைவர் தமது முன்னுரையில் முகாமைக்காரரின் கலைத்தொண்டைப் பாராட்டிப் பேசினர். அப்பாடசாலை வடமாகாணக் கைத்தொழில் கமத்தொழிற் பொருட்காட்சிகளில் தங்கப் பதக்கமும், வெள்ளிப் பதக்கமும் ஒருசேரப் பெற்றதைக் குறிப்பிட்டுப் பாடசாலையின் உள்ளும் புறமும் நடைபெற்று வரும் வேலைகளையும் வியந்தார். வட்டார வித்தியாதரிசி ஸ்ரீ S தியாகராசா அவர்கள் பாடசாலையி யங்களைப் புகழ்ந்து பேசி முற்போக்கு வாய்ந்த அவ்வித பாடசாலைகளே எதிர்காலத்துக்குத தேவைப்படுகின்றன வெனக் குறிப்பிட்டார்.

# இந்திய அரசியல்

### எளிய செயல்

மகாத்மாகாந்தியைக் காண்பதற்காகக் கிழக்கு வங்காளத்துக்குப் பண்டிதர் ஜவஹர்லால் செல்லும் மார்க்கத்திலே, சௌமாகனி என்னுமிடத்தில் இறங்கி ஓர் சொற்பொழிவு செய்தார். ஆயிரக்கணக்கான மக்கள் அவர் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டு நின்றனர். அப்படி அவர் பேசிக்கொண்டு நிற்கையில், எங்கோ இருந்து ஓர் கல் அவர்மீது எறியப் பட்டது. அதன் பயனுக அவர் சொற்பகாயமடைந்தார். இப்படியாக ஒழித்துப் பதுங்கி இந்த எளிய வேலையைச் செய்தற்கு, முஸ்லிம்லீக்கர்களால்தான் முடியும் என்பதை நேருவும் அங்கு நின்றவர்களும் உணர்ந்தனர். இப்படியான கள்ளத்தனமான, கல்வீச்சுக்களாலும், எளிய செய்கைகளாலும், முஸ்லிம்லீகர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே ஆட்டிவைத்த ஓர் வீரனிடம் பாகிஸ்தான் பெறலாம் என்று நினைத்தால் அது அவர்களுடைய மூளைப்பிசகையே காட்டும் அன்றி வேறொன்றுமாகாது.

●

### சீக்கியருடன் கொளுவுகிறுர்கள்!

ஹிந்துக்களுடன் கொளுவியது போக, முஸ்லிம்லீக்கர், இப்போது சீக்கியருடன் வாதுபோடத் தலைப்பட்டுவிட்டனர் என்று தெரிகிறது அலகபாத் நகரில், சென்ற ஞாயிற்றுக்கிழமை சீக்கியரின் ஊர்வலம் ஒன்று சென்றபோது, முஸ்லிம் காடையர் ஏதோ கலவரம் விளைத்ததன் பயனுக, சீக்கியர்க்கும் முஸலிம்களுக்குமிடையே ஓர் கலகம் மூண்டது என்றும் அதன் பயனுக 7 பேர் மாண்டனர் என்றும் இப்போது தெரிகிறது, முஸலிம்லீக்கர், ஆழந் தெரியாமல் காலை வைப்பரேயானல் ஈற்றில் இடர்ப்படுவர் என்பது திண்ணம்.

●

### இனி நடப்பதென்ன?

சென்ற சனிக்கிழமை மகாத்மா காந்திக்கும் பண்டிதர்நேரு முதலாம் காங்கிரஸ தலைவர்களுக்கு மிடையே பிரிட்டிஷ் அரசாங்கம் சென்ற 6-ந்உ விடுத்த அறிக்கை சம்பந்தமான ஆலோசனை நடந்ததாகத் தெரிகிறது. குறித்த அறிக்கையைக் காங்கிரஸ ஒப்புக்கொண்டால்தான் முஸலிம் லீக்கும் அரசியல் நிர்மாணசபையிற் சேரும். எனவே, இச்சமயத்திலே காங்கிரசுக்கும், லீகிற்கும் உள்ள பிரிவினையை அதிகரிக்கக்கூடாது என்றும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் மகாத்மாகாந்தி ஆலோசனை கூறியதாக ஓர் செய்தி கூறுகிறது. ஆனல் இவ்விஷயமாசப்பூரணமான ஓர் விபரமும் தெரியவில்லை,

●

### அகில இந்திய ஹிந்துமகாசபை

அகில இந்திய ஹிந்துமகாசபைக் கூட்டம் சென்ற 26ந் திகதி கோரக்பூரில் ஆரம்பமாயது. ஸ்ரீஜுத் போபத்கார் தலைமைவகித்து உணர்ச்சி மிகுந்த ஓர் பிரசாரணம் செய்தார்.


## விளம்பரம்

பரிசு ரூ. 1000—00

சாதாரண

அறிவுப்போட்டி நிர் 1

பிரவேசக் கட்டணம்

சதம் 50|

முடிவு தேதி 31—1—47

விபரத்திற்கு

சாதாரண அறிவுப்போட்டி

Leon Villa Bo'awatta

Dankottuwa

என்னும் விலாசத்திற்கெழுதவும்

Mis 31 7—1-46


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் ஜனவரி 1

காலை 7.15 கிதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 குர்பகோணம் சிவவடிவேலுபிள்ளை வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 என் ஜி வசந்தகோகிலம் இசைத்தட்டு 8.30 சமயபாம் கே நாராணசாமி பாட்டு 9 முடிவு.

1 சதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 சமயபுரம் கே நாராயணசாமி பாட்டு 2 தமிழில்செய்திகள 2.05 சமயபுரம் கே நாராணசாமிபிள்ளை பாட்டு 2.10 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 குர்பகோணம் சிவவடிவேலுபிள்ளை வயலின் 5 30 மகாசில் உள்ளபடி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7.15 வன்றோட்டம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதராஸ் 1-ல் உள்ளபடி 8 செம்பை வைத்தியநாத பாகவதர் இசைத்தட்டு 8-15 நமது சங்கீதம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஐரோப்பிய சங்கீதம் (இசைத்தட்டு) 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானலை 9.45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10 மதராசிலுள்ளபடி 10-30 முடிவு.

### வியாழன் ஜனவரி 2

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 தேசமங்கலம் ருவக்க டேசுவரய்யர் வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் இசைத்தட்டு 8.30 ஜி ஜானகி பாட்டு 9 முடிவு.

1 சதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜி ஏ ச லம் பாட்டு 2 தமிழில் செய்திகள 2-05 ஜீ ஏ ஜாலம் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு

மாலை 5 ஜி ஜானகி பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7.15 செய்தி விளக்கம் 7.20 தமிழில் செய்திகள 7.45 டி வி நமசிவாயம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 முதல்பயறு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.10 அறிவிப்புகள் வானலை 9.45 தேசமங்கலம் ஆர். வெங்கடேஸ்வர அய்யர் வீணை 10.30 முடிவு.

### வெள்ளி ஜனவரி 3

காலை: 7.15 கிதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 குருமலை லட்சுமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 கிருஷ்ண வாத்யகோஷ்டி 8.30 பி ஸி ஸீதாராமய்யர் பாட்டு 9 முடிவு.

1 சதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 குருலட்சுமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 குருமலை லட்சுமி பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 சிப்பாம்புரம் என் சிவசுப்ரமணியம் பிள்ளை பாட்டு 5.40 சராவதிப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி என் ஆர் நடராஜா நாகஸ்வரம் 7.30 தமிழில் செய்திகள் 7.45 கிலை உரிமை 8 திருப்பாம்புரம் என் சிவசுப்ரமணிய பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 8.30 டி என் ஆர் நடராஜா நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 கே பி சுந்தராம்பாள் இசைத்தட்டு 9-20 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 என் ஆர் நடராசா புல்லாங்குழல் 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10.30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணேசன்துணை

# சிதம்பர அம்பலவாணசுவாமி மாஞ முதலியார் மடம் தொல்புரம்

**சிவநேயச் செல்வர்காள்!**

சிதம்பர அம்பலவாணசுவாமி மாஞ முதலியார் மடத்துக்குச் சொந்தமான 117 ஆதனங்கள் யாழ்ப்பாணப்பகுதியிலும் 17 ஆதனங்கள் இந்தியாவிலும் இருக்கின்றன. தற்போது D C. J. 15340-ம் இலக்க வழக்கின் பேராக ஏற்படுத்திய தர்மபரிபாலன சபையார் அக்கிராசனர் திரு. வ அம்பலவாணர், காரியதரிசி முகாந்திரம் மு. கிருட்ணர், மனேச்சரும் தனாதிகாரியும் மா. கனகசுந்தரம், வ. சதாசிவம், சு. முத்துக்குமாரு, அ. வயித்திலிங்கம், இ தம்பையா ஆகிய எழுவரும், யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள 73 ஆதனங்களையே பரிபாலனஞ் செய்து வருகின்றனர். மிகுதியான 61 ஆதனங்களையும் இச்சபையாரின் பரிபாலனத்துக்குச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஆகவே சைவாபிமானிகள் இது விஷயத்தில் துணைபுரிவார்களாக.

இத் தர்மபரிபாலனசபையின் நோக்கங்கள்:

1 சிதம்பர நடராசப் பெருமானின் அர்த்தசாமப் பூசையையும் மற்றும் இதற்குரிய திருநாட்களைச் சீர்பெற நடப்பித்தல்
2 தொல்புரம்மடத்தில்குருபூசை, மாகேசுவரபூசைகளை ஒழுங்காய்நடப்பித்தல்.
3 யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் உள்ள மடங்களைப் பரிபாலித்தல்.
4 மிக வறிய ஏழைகட்கு அன்னதானஞ் செய்தல்.
5 சமய வளர்ச்சிக்காவன செய்தல்.
6 நோயாற் பீடிக்கப்பட்ட ஏழைகட்கு உதவிசெய்தல், இன்னோரன்ன.

இன்னும் சபையின் ஆதீனத்துக்கு 61 ஆதனங்களின் வருவாய் கிடையாதபடியாலும் இப்போது பரிபாலனம் செய்யும் நிலங்களின் குத்தகை வருவாயை குத்தகை எடுத்தவர்கள் குறித்த தவணையில் தராது விடுவதாலும் மேற்சொல்லப்பட்ட நோக்கங்களை சரிவரச் செய்ய முடியாமல் ஷை சபையார் இடர்ப்படுகின்றனர்.

இத்தர்மச் சொத்தைக் குத்தகையாக ஏற்றவர்கள் செலுத்தவேண்டியனவை தவணை தப்பாமல் செலுத்தி உதவிபுரியவேண்டுமென்றும், இன்னும் கைக்கெட்டாத ஆதனங்களைச் சேரச் செய்ய அபிமானிகள் உதவிபுரியவேண்டு மென்றும் இச்சபையார் மிகவும் பணிவாகக் கேட்டுக் கொள்கின்றனர்.

நடேசன் அருள் பெருகுக.

இச்சபை ஏற்ற திகதிதொடக்கமாகவுள்ள வரவு செலவுக் கணக்குகளையும் கீழே சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்,
பரிபாலன சபையார்.

## 1—6—44 தொடக்கம் 31—3—46 வரை

| வரவு | ரூ. | ச. |
|---|---|---|
| | 13 | 00 |
| தர்மம் | 5000 | 00 |
| குத்தகை காசு | 144 | 75 |
| ஓலை மரம் விற்றது | 135 | 00 |
| புல்லு விற்றது | 19 | 75 |
| ஆணி விற்றது | 5 | 50 |
| சில்லறை வரும்படி | 5 | 60 |
| தபால்கந்தோர் வட்டி | | |
| | 5323 | 60 |

| செலவு | ரூ. | ச. |
|---|---|---|
| சிதம்பரம் தீட்சதர் | 1535 | 00 |
| மணியோடர் தபால் செலவுகள் | 49 | 72 |
| கடதாசி பேனை | 22 | 90 |
| தொல்புரம் மடம் பூசை | 121 | 07 |
| மடவளவு பராபரிப்பு | 124 | 25 |
| மட கட்டிடங்கள் | 615 | 50 |
| வழக்கு செலவு | 292 | 55 |
| உறுதி எழுதிய செலவு | 105 | 75 |
| பிரயாணச் செலவு | 159 | 28 |
| லிகிதர் சம்பளம் | 770 | 00 |
| கூட்டச் செலவு | 32 | 00 |
| சில்லறைச் செலவு | 34 | 60 |
| மொனிசிபாலிற்றி | 40 | 00 |
| நாராணசாமி சம்பளம் பழைய பாக்கி | 300 | 00 |
| தபால் கந்தோரில் | 605 | 60 |
| கையிருப்பு | 515 | 38 |
| | 5323 | 60 |

வ. அம்பலவாணர், அக்கிராசனர்.
மா. கனகசுந்தரர், மனேசரும், தனாதிகாரியும்.
மு. கிருட்டினர், காரியதரிசி.

மேற்கண்ட கணக்குச் சரியெனக் காணப்பட்டது.
17—12—46.
சி. ந. தேவராஜன், பப்பிளிக் ஓடிற்றர்.

Mis 282 27 & 31—12—46,


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Mis 246 20-11-46—20-11-47 (தி)



# NEW IRON SAFES FOR SALE

## புதிய இரும்புப் பெட்டிகள்
விற்பனைக்கு வந்துவிட்டன

**யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி**

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கோள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele { Phone 68
grams SIRIRANGAN

**S. S. PONNUDURAI**
**Siri. Pathmanatha Store**
105. K. K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13.12.46—12-3.47



# India Super Tyres and Tubes

## இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்
கார் லொறி சைஸ்கள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம் 21-ந்உ யுடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால் தேவையானதற்கு இப்பொழுதே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

**C. S. Nadarajah Chetty,**
41, K. K. S Road, JAFFNA.

Mis 257 3-12—28-2-47



# பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாகும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:
**க. ஆறுமுகம்பிள்ளை**
கீ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)

## நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க். த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினுல், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22-10 to 21-1-47)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, Desember, 31, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org